

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (26.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசு மருத்துவச் சங்கத்தின் தலைவர் டாக்டர் கே செந்தில், பொதுச் செயலாளர் டாக்டர் சீனிவாசன், தலைமை நிலையச் செயலாளர் டாக்டர் சந்திரசேகர், சென்னை மாவட்ட தலைவர் டாக்டர் ஆல்வின் ஆகியோர் சந்தித்து, அரசு மருத்துவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கியமைக்காகவும், அரசு மருத்துவர்களின் பணியிடமாறுதல், பதவி உயர்வு மற்றும் பணி நியமனங்கள் போன்றவற்றை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருவதற்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை 25.2.2025 அன்று, மகாராஷ்டிரா மாநிலம் தானேவில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான இறகுப் பந்துப் போட்டியில், 11 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தங்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வன். சிபிஜெரோ சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உடனிருந்தனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் – கந்தர்வக்கோட்டை – வெள்ளாளவிடுதியில் நிகழ்ந்த விபத்தில்

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை,பிப்.28-

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வ கோட்டை வட்டம், வெள்ளாளவிடுதி வருவாய் கிராமத்திலுள்ள அரசு விதைப் பண்ணையில் நிகழ்ந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவி வழங்கவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:


புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், வெள்ளாளவிடுதி வருவாய் கிராமத்தில் அமைந்துள்ள அரசு விதைப் பண்ணையில், சங்கம் விடுதி வருவாய் கிராமம், குருவாண்டான் தெருவைச் சேர்ந்த திருமதி. ஜெயலலிதா (வயது 40) க/பெ.விஜய குமார் என்பவர் கடந்த 21.2.2025 அன்று வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது எதிர்பாராதவிதமாக உளுந்து அடிக்கும் இயந்திரத்தில் சேலை சுற்றி தலையின் பின்புறத்தில் காயம் ஏற்பட்டு தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் 26.2.2025 அன்று பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்த விபத்தில் உயிரிழந்த திருமதி.ஜெயலலிதா அவர்களின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் சிறப்பிதழ்!

## நாளை வெளிவருகிறது!



'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர், கழகத் தலைவர், திராவிட நாயகர், மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் சிறப்பிதழ் நாளை (மார்ச் – 1) 'முரசொலி' நாளிதழுடன் வெளிவருகிறது!

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, பிப். 28 -

சென்னை, தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தலைவராக ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு ஆய்வுகளுக்கு புதிய உந்துதலை அளிக்கும்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. (ஓய்வு) அவர்கள் ஒரு புகழ்பெற்ற தமிழ் மொழி அறிஞரும், ஆட்சிப் பணி வல்லுநரும் ஆவார். தமிழ் இலக்கியத்தில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களைப் பெற்ற இவர், தமிழில் குடிமைப்பணித் தேர்வுகளை எழுதி வென்ற முதல் தமிழ் மாணவர்.

ஆய்வாளர், படைப்பாளர் என்ற இரு தளங்களில் செயல்படும் இவர் 15 நூல்களின் ஆசிரியர். சிந்து வெளிப் பண்பாட்டு தொல்லியல் தரவுகளை சங்க இலக்கியங்கள் மற்றும் தமிழ்நாட்டு அகழாய்வுத் தரவுகளோடு ஒப்பிட்டு இவர் எழுதியுள்ள ஆங்கிலம் மற்றும் தமிழ் நூல்கள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.



இந்திய ஆட்சிப் பணியில் 1984ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், ஒடிசா அரசிலும் இந்தியத் தேர்தல் ஆணையத்திலும் 34 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். ஒடிசா மாநிலத்தின் நிதித்துறைச் செயலர், கூடுதல் தலைமைச் செயலாளர், வளர்ச்சி ஆணையர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

2018ல் பணிஓய்வு பெற்ற இவர் அதன்பிறகு முன்னாள் ஒடிசா மாநில முதல்வரின் தலைமை ஆலோசகராக 2024 வரையில் பொறுப்பு வகித்தார். திராவிட மொழிக்குடும்பத்தின் பரவல், சிந்து சமவெளிப் பண்பாடு, தொல்தமிழ்த் தொன்மங்கள், சங்க இலக்கியங்கள் மற்றும் திருக்குறள் குறித்த இவரது செயல்பாடும் பங்களிப்பும் உலகத் தமிழர்களால் பாராட்டப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் மும்மொழி கொள்கை மூலம் இந்தியை திணிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திண்டிவனத்தில் மாவட்ட மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## மாணவர் அணி பிரசன்னா தலைமையில்! செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கண்டன உரை!

திண்டிவனம் பிப் 28–

தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கை மூலம் இந்தியை திணிக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து திண்டிவனத்தில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம். செஞ்சி மஸ்தான் எம் எல்.ஏ. கண்டன உரை நிகழ்த்தினார்.

ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழகத்திற்கு எதுவும் செய்யவில்லை கல்விக்கு வழங்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு வழங்கவில்லை தமிழ்நாடு மக்கள் கட்டிய வரிப்பணத்தை பெற்றுக் கொண்டு ஒன்றிய அரசு நிதி வழங்க மறுக்கிறது.

கல்வி என்பது ஒத்திசைபட்டியலில் தான் உள்ளது. ஒன்றிய அரசின் நிபந்தனைகளை மாநிலங்கள் ஏற்க வேண்டிய அவசியம் இல்லை. கடந்த ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இடம் பெறவில்லை. அப்புறம் எப்படி தமிழ்நாட்டிற்கு சிறப்பு திட்டங்கள் கிடைக்கும். மத்திய அரசு மும்மொழி கொள்கையை ஏற்றால் தான் பள்ளி கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவோம் என்று மிரட்டி நிதியை முழுமையாக நிறுத்தி வைத்திருக்கிறது. மும்மொழிக் கொள்கையின் மூலமாக தமிழ்நாட்டில்இந்தியை திணிக்க முயற்சி செய்கிறது.

நம் மாணவர்களின் கல்விக்கான நிதியை விடுவிக்க மும்மொழிக் கொள்கையை ஏற்க வேண்டும் எனக் கூறும் ஒன்றிய அரசை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில்தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு கடுமையாக எதிர்த்து வருகிறது.

மேலும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கை மூலம் இந்தியை திணித்திடும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்துவிழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் தலைமை தபால் நிலையம் அலுவலகம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை தாங்கினார்.மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் சுபாஷ் சந்திர போஸ், லோகநாதன்,ஞானசேகரன், மதிவாணன், பென்சிர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மும்மொழிக் கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சி செய்யும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்துகண்டன உரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ் செல்வன், மாவட்டஅவைத்தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட பொருளாளர் ரமணன் ,மாவட்ட துணை செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், அருணகிரி, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# ஈடு இணையிலா எங்கள் முதல்வர்
# நாடு போற்றிட நலமுடன் வாழ்க!

இந்திய முதல்வர்கள் வரிசையில்
எங்கள் முதல்வரே முதல்வர்
சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்தால் – இந்தச்
சிறப்பின் உண்மை விளங்கும்!

கல்வி, மருத்துவம், தொழில்துறையில்
காண்போர் வியக்கும் அளவுக்கு
எல்லாத் துறையிலும் முதலிடம் – இதுவே
எங்கள் முதல்வரின் அடையாளம்!

ஒத்துழைப்புத் தராத ஒன்றியம் – நிதி
ஒதுக்காமல் தமிழ்நாட்டை வஞ்சித்தாலும்
எத்திசையும் புகழ்மணக்கும் அளவுக்கு
ஏற்றமுடன் ஒளிர்கிறது தமிழ்நாடு...!

நாளொரு வளர்ச்சியும் மலர்ச்சியும் எங்கள்
நாயகன் ஆட்சியில் காணுகிறோம்...!
வாளொடு பிறந்த தமிழ்க்குடி – எனும்
வரலாற்றில் பெருமை பூணுகிறோம்!

கோட்டை நாற்காலியில் அமர்ந்தபடி
கோலோச்சும் முதல்வர் இவரல்ல...
நாட்டு மக்கள் களஆய்வில்
நாள்தோறும் நேரிலே சந்திப்பவர்...!

இப்படித்தான் முதல்வர் இருக்கணும்
என்பதற்கு இலக்கணம் இவரன்றோ நான்
செப்பிய இக்கவிதை வரிகளுக்கு
செம்மை இலக்கியமும் இவரன்றோ...!



வருகின்ற தேர்தலிலும் வாகைசூடி – புது
வரலாறு படைத்திட வேண்டுமென
அருந்தமிழ்க் கலைஞரின் புதல்வரை
அன்புடன் வாழ்த்தி மகிழ்கின்றோம்...

எங்கள் தளபதி ஸ்டாலினின்
ஏற்றமிகு பிறந்த நாளிலே
சிங்கமாய் சிலிர்த்து சபதமிடுவோம்!
செழிப்பான தமிழ்நாடு அமைந்திடவே!



கவிஞர் இரவிபாரதி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வி. நித்யானந்தம்

பிப்ரவரி 28 (2020)



இளமைக் காலம் முதல் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

நகர இளைஞர் அணி அமைப்பாளர், நகரச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

வாலாஜா நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் நகர்மன்றத் தலைவராகவும் பதவி வகித்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.